பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 03 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- நாட்டில், ஆராய்ச்சிப்பணிகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

- சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- நிலக்கரி இறக்குமதியை குறைக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாக நிலக்கரித்துறை இணையமைச்சர் திரு சத்தீஷ் சந்திர துபே கூறியுள்ளார்.

- ரயில்வே உணவு மற்றும் சுற்றுலாக் கழகத்திற்கும், ரயில்வே நிதிக்கழகத்திற்கும் நவரத்னா அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

- Prague செஸ் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா மற்றும் அரவிந்த் சிதம்பரம் முதலிடத்தில் உள்ளனர்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

நாட்டில், ஆராய்ச்சிப்பணிகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

மத்திய பல்கலைக்கழகங்களின் சிறந்த ஆய்வுப்பணிகளுக்கான விருதுகளை குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி அவர் பேசினார்.

உயர்கல்வி நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கற்பிப்பதில் கூடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நம் நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள் சர்வதேச தரத்திற்கு இணையான அங்கீகாரத்தை பெறுவதற்கான திறனை கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலம் கல்வி நிறுவனங்களால்தான் உருவாக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

கல்வி கற்பதற்கு எதுவும் தடைக்கல்லாக இருக்கக்கூடாது என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சுழற்சி பொருளாதாரம் தொடர்பான ஆசிய பசிபிக் பொருளாதார அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகளுக்கு, பிரதமர் பகிர்ந்த செய்தியில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கையுடன் இயைந்த வாழ்க்கை முறை இயக்கத்திற்கு தாம் அழைப்பு விடுத்ததை பிரதமர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கரியமில வாயு வெளியேற்றத்தை முழுமையாக தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதமர் அந்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு மனோகர்லால், கழிவுப்பொருட்கள் மேலாண்மையில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறினார்.

<<<<<<>>>>>

கோவாவில் புதிய குற்றவியல் சட்டங்களின் செயலாக்கம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, இன்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டார்.

கோவா முதலமைச்சர் திரு Pramod Sawant மற்றும் உயரதிகாரிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

நிலக்கரித்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு சத்தீஷ் சந்திர துபே கூறியுள்ளார்.

இன்று காந்தி நகரில் நிலக்கரித்துறையில் தனியாருக்கான வாய்ப்புகள் குறித்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

நிலக்கரி இறக்குமதியை குறைக்க வேண்டும் என்ற நோக்கில், தனியார் பங்களிப்புக்கு ஊக்கம் அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

நிலக்கரி சுரங்க தொழிலாளர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

உரிய சுற்றுச்சூழல் நெறிமுறைகளை பின்பற்றி நிலக்கரி சுரங்கங்கள் செயல்பட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

நிலக்கரித்துறையில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்றும் திரு சத்தீஷ் சந்திர துபே அழைப்பு விடுத்தார்.

<<<<<<>>>>>

மகளிர் இடையே நிதி தொடர்பான விழிப்புணர்வு வெகுவாக அதிகரித்துள்ளதாக நித்தி ஆயோக்கின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் இந்த அறிக்கை தொடர்பான விவரங்களை வெளியிட்ட நித்தி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு B V R சுப்பிரமணியன், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இறுதிவரை, 2 கோடியே 70 லட்சம் மகளிர் தங்களது கடன் குறித்த விவரங்களை கண்காணித்து வருவதாக குறிப்பிட்டார்.

மகளிர் தங்களது நிதி பரிவர்த்தனைகளை சுயமாக கண்காணித்துக்கொள்வது என்பது, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 19 புள்ளி நான்கு மூன்று சதவீதமாக இருந்தது என்று அவர் கூறினார்.

தற்போது, இது 42 சதவீதமாக உயர்ந்துள்ளதாக சுப்பிரமணியன், தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ரயில்வே உணவு மற்றும் சுற்றுலாக் கழகத்திற்கும், ரயில்வே நிதிக்கழகத்திற்கும் நவரத்னா அந்தஸ்தினை மத்திய அரசு வழங்கியுள்ளது.

இதனையடுத்து, நவரத்னா அந்தஸ்து பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 26-ஆக அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ரயில்வேத்துறைக்குகீழ் செயல்படும், ரயில்வே உணவு மற்றும் சுற்றுலாக்கழகம் ஆண்டுக்கு நான்காயிரத்து 270 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் புரிவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் ஆயிரத்து 111 கோடி ரூபாய் நிகர லாபம் ஈட்டுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே நிதிக்கழகமும், 6 ஆயிரத்து 412 கோடி ரூபாய் அளவிற்கு நிகர லாபம் ஈட்டி வருகிறது.

நவரத்னா அந்தஸ்தை இவ்விரு நிறுவனங்களும் பெற்றுள்ளதற்காக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரயில்வேயின்கீழ் செயல்படும் ஏழு பொதுத்துறை நிறுவனங்களும் தற்போது நவரத்னா அந்தஸ்து பெற்றிருப்பதை குறிப்பிட்டார்.

இது மிகப்பெரிய சாதனை என்றும், ரயில்வேத்துறையை சீரமைக்க வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் உறுதியே இதற்கு காரணம் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் ஐந்து சட்ட மேலவை உறுப்பினர்களுக்கான தேர்தல் வரும் 27-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 10-ஆம் தேதி தொடங்குகிறது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய 17-ஆம் தேதி கடைசிநாளாகும்.

அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

மனுக்களை விலக்கிக்கொள்ள 20-ஆம் தேதி கடைசிநாளாகும்.

போட்டி இருக்கும் பட்சத்தில் தேர்தல் நடைபெறும் என்றும், வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர், அம்மாநில ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் உரையுடன் இன்று தொடங்கியது.

சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார அமைப்பின் மாநாட்டில் 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்களில் மகாராஷ்ட்ரா கையெழுத்திட்டுள்ளதாக ஆளுநர் தமது உரையில் குறிப்பிடடார்.

இதன்மூலம், புதிதாக 15 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஜார்கண்ட் அரசு வரும் நிதியாண்டிற்கான ஒரு லட்சத்து 45 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பட்ஜெட்டை இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தது.

நிதியமைச்சர் திரு ராதாகிருஷ்ண கிஷோர் இதனை தாக்கல் செய்து பேசுகையில், வரும் நிதியாண்டில் மாநிலத்தின் பொருளாதாரம் ஏழு புள்ளி ஐந்து சதவீதம் அளவிற்கு வளர்ச்சியை எட்டும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இலவச மின்சார திட்டதிற்காக 5 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு, செய்யப்படுவதாக அவர் கூறினார்.

18 முதல் 50 வயதுக்கு உட்பட்ட மகளிருக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக 13 ஆயிரத்து 363 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திரு ராதாகிருஷ்ண கிஷோர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சத்தீஸ்கரில் பெட்ரோல் மீதான மதிப்புக்கூட்டு வரி, லிட்டருக்கு ஒரு ரூபாய் குறைக்கப்படுவதாக அம்மாநில நிதியமைச்சர் திரு ஓ பி சௌத்ரி கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை தாக்கல் செய்து அவர் உரையாற்றினார்.

நக்சலைட் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில், 3 ஆயிரத்து 200 பேரை கொண்ட படைப்பிரிவு ஏற்படுத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்த பட்ஜெட் உரையில் 11 புதிய அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் கர்நாடகா பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது என்று அம்மாநில ஆளுநர் திரு தாவர் சந்த் கெலாட் கூறியுள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவையில் இன்று உரையாற்றிய அவர், மூலதன செலவினங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 15 புள்ளி பூஜ்யம் ஒன்று சதவீதம் செலவிடப்படுவதாக கூறினார்.

இது மகாராஷ்ட்ரா, தமிழகம், தெலங்கானாவை விட அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

மைசூர் விமான நிலையம் 319 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்பட உள்ளதாக ஆளுநர் கூறினார்.

<<<<<<>>>>>

தில்லி சட்டப்பேரவையில் தலைமை கணக்கு தணிக்கையாளரின் அறிக்கை தொடர்பான விவாதம் இன்று மீண்டும் தொடங்கியது.

இந்த விவாதத்தின்போது குறுக்கிட்டு பேசிய தில்லி சுகாதாரத்துறை அமைச்சர் திரு பங்கஜ் குமார் சிங், முந்தைய ஆம் ஆத்மி அரசு பல்வேறு ஊழல் புரிந்துள்ளது இந்த அறிக்கை மூலம் தெரியவந்துள்ளதாக கூறினார்.

ஆம் ஆத்மி அரசின் நிதி முறைகேடுகள் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் திரு பங்கஜ்குமார் தெரிவித்தார்.

***<<<<<<>>>>>***

Prague செஸ் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா மற்றும் அரவிந்த் சிதம்பரம் முதலிடத்தில் உள்ளனர்.

இதுவரை, இருவரும் தலா மூன்றரை புள்ளிகளை பெற்றுள்ளனர்.

-----------------

உலக ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் Pranav Venkatesh முதலிடத்தில் உள்ளார்.

Montenegro –வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆறாவது சுற்றில் அவர், அர்மீனியாவின் Emin Ohanyan-ஐ வென்றார்.

--------------------

மெக்சிகோவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Krishna Jayasankar வெண்கலப்பதக்கம் வென்றார்.

மகளிர் குண்டுஎறிதலில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

***<<<<<<END>>>>>***